பிப் 12 தேதி அன்று 100 நாள் வேலை ரத்து – விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் – நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டைப் புறக்கணித்த, ஒன்றிய பா.ஜ.க. அரசையும் – அதற்கு ஒத்து ஊதும் அடிமை அ.தி.மு.க.வையும் கண்டித்து!

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ் ராஜ் அறிவிப்பு!



100 நாள் வேலையை ஒழிக்கும் சட்டம், விவசாயிகள் வயிற்றில் அடிக்கும் அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம், நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை புறக்கணித்து, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வளர்ச்சியைத் தடுத்து வரும் ஒன்றிய பாஜக அரசையும் – அதற்கு ஒத்து ஊதும் அடிமை அதிமுகவையும் கண்டித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியம், நகரம் மற்றும் பேரூர் கழகங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள மீஞ்சூர் வடக்கு ஒன்றியம் கும்மிடிப்பூண்டி பேரூர் எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் சோழவரம் மேற்கு ஒன்றியம், மீஞ்சூர் மேற்கு ஒன்றியம், கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம், ஆரணி பேரூர், எல்லாபுரம் தெற்கு ஒன்றியம், மீஞ்சூர் தெற்கு ஒன்றியம், மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம், சோழவரம் வடக்கு ஒன்றியம், பொன்னேரி நகரம், மீஞ்சூர் பேரூர், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம், பூண்டி வடக்கு ஒன்றியம், பூண்டி கிழக்கு ஒன்றியம், ஊத்துக்கோட்டை பேரூர் உள்ளிட்ட கழக நிர்வாகங்களில் வருகிற 12.02.2026 வியாழக்கிழமை. காலை 10.30 மணியளவில், கீழ்க்கண்ட அட்டவணைப்படி கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆலோசனை படி ஒன்றிய பா.ஜ.க. அரசையும். அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| கழக நிர்வாகம் | தலைமை ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் | கண்டன உரை | முன்னிலை | இடம் |
|---|---|---|---|---|
| மீஞ்சூர் வடக்கு ஒன்றியம் | மு.முரளிதரன் | எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் மாவட்ட பொறுப்பாளர். எழும்பூர் கோபிநாத் கழக பேச்சாளர் | மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் ஆ.முகமது அலவி, | திருபாலைவனம் கடை வீதி |
| கும்மிடிப்பூண்டி பேரூர் | இரா.அறிவழகன் | டி.ஜெ.கோவிந்தராஜன், எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் தமிழ் சாதிக் கழக பேச்சாளர் | கும்மிடிப்பூண்டி பேரூராட்சி மன்ற தலைவர் சசிகலா அறிவழகன் கும்மிடிப்பூண்டி பேரூராட்சி மன்ற துணை தலைவர் கேசவன் மாவட்ட மீனவர் அமைப்பாளர் கே.ஆறுமுகம் | கும்மிடிப்பூண்டி பஜார் |
| எல்லாபுரம் வடக்கு ஒன்றியம் | பி.ஜெ.மூர்த்தி | பி.ஜெ.மூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்னேரி சிவா கழக பேச்சாளர் | மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளர் கே.வி.லோகேஷ், மாவட்ட மகளிர் தொண்டர்அணி அமைப்பாளர் ச.ஜெயலலிதா | பாலவாக்கம் |
| சோழவரம் மேற்கு ஒன்றியம் | வே.ஆனந்த குமார் | மு.பகலவன் மாவட்ட அவைத்தலைவர் வாசு கருணாநிதி கழகப் பேச்சாளர் | மாவட்ட பொறியாளர் அமைப்பாளர் ரோஸ் பொன்னையன், | தச்சூர் கூட்டு ரோடு |
| மீஞ்சூர் மேற்கு ஒன்றியம் | ஆ.ராஜா | K.G.பாஸ்கர் சுந்தரம், வர்த்தக் அணி துணை செயலாளர் நாகம்மை– கருப்பையா கழக பேச்சாளர் | மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஏ.கே.சம்பத். | மேட்டுப் பாளையம் |
| கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் | மு.மணிபாலன் | C.H.சேகர், மாநில தகவல் தொழில்நுட்ப துணை செயலாளர் வண்ணை புகாரி கழகப் பிரச்சனை | மாவட்ட விவாசய தொழிலாளர் அணி அமைப்பாளர் டி.மணி மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜி.ரமேஷ் | பாதிரிவேடு |
| ஆரணி பேரூர் | பி.முத்து | வெ.அன்புவாணன், கொள்கை பரப்பு செயலாளர் மீசா– தமிழரசன் கழகப் பேச்சாளர் | மாவட்ட நெசவாளர் அமைப்பாளர் அணி ஜி.பி..வெங்கடேசன். | ஆரணி பேருந்து நிலையம் அருகில் |
| எல்லாபுரம் தெற்கு ஒன்றியம் | ஆ.சத்தியவேலு | G.ஸ்டாலின், மாநில அயலக அணி துணை செயலாளர் தக்கோல தேவபாலன் கழக பேச்சாளர் | மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுஅணி அமைப்பாளர் கா.சம்பத் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பா.தனசேகர் | கன்னிகைபேர் |
| மீஞ்சூர் தெற்கு ஒன்றியம் | கா.சு.ஜெகதீசன் | A.K.சுரேஷ், தலைமை கழக வழக்கறிஞர் கொரஞ்சூர்–முனுசாமி | மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்ஆ.வெற்றி (எ)ராஜேஷ் | தேவதானம் |
| மீஞ்சூர் கிழக்கு ஒன்றியம் | ARD.உதய சூரியன் | M.G.ராபர்ட் ராஜதுரை, சிறுபான்மையினர் அணி துணை செயலாளர் அத்திப்பட்டு–சாம்ராஜ் கழக பேச்சாளர் | மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் நி.வில்சன் | கவுண்டர் பாளையம் |
| சோழவரம் வடக்கு ஒன்றியம் | நா.செல்வ சேகரன் | எம்.எல்.இரவி, மாவட்ட துணை செயலாளர் பாலசந்திரன் கழக பேச்சாளர் | மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் N.கிருஷ்ணமூர்த்தி | ஆண்டார் குப்பம் |
| பொன்னேரி நகரம் | ஜி.ரவிக்குமார் | பரிமளம் விஸ்வநாதன், பொதுக்குழு உறுப்பினர் ராஜ ராஜேஸ்வரி கழக பிரச்சனை | மாவட்ட மகளிர் அமைப்பாளர் அணி தேசராணி தேசப்பன் | பொன்னேரி பஜார் |
| மீஞ்சூர் பேரூர் | க.சு.தமிழ் உதயன் | கே.சுப்பிரமணி, பொதுக்குழு உறுப்பினர் ஆலந்தூர்– மலர்மன்னன் கழகப் பேச்சாளர் | மீஞ்சூர் பேரூராட்சி மன்ற தலைவர் ருக்மணி மோகன்ராஜ் மீஞ்சூர் பேரூராட்சி மன்ற துணை தலைவர் ப.அலெக்சாண்டர் | மீஞ்சூர் பஜார் |
| கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் | கி.வேணு ஆனந்த் | பா.செ.குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் விக்னேஷ் உதயன் கழக பேச்சாளர் | மாவட்ட அயலக அணி அமைப்பாளர் எம்.ஆர். ஸ்ரீதர் | புது கும்மிடிப்பூண்டி |
| கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம் | நா.பரிமளம் | பி.வெங்கடாசலபதி, பொதுக்குழு உறுப்பினர் முரசொலி– மூர்த்தி கழகப் பேச்சாளர் | மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் மு.பாஸ்கர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ்.கோபி | பெத்திகுப்பம் |
| பூண்டி வடக்கு ஒன்றியம் | ஜான் (எ) பொன்னுசாமி | மு.கதிரவன், மாவட்ட துணை செயலாளர் சென்னை– அரங்கநாதன் கழக பேச்சாளர் | மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி அமைப்பாளர் வி.பி.ரவிக்குமார் | சீத்தஞ்சேரி |
| பூண்டி கிழக்கு ஒன்றியம் | டி.கே.சந்திர சேகர் | ஏ.வி.இராமமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் ஆலந்தூர் – ஒப்பிலா மணி கழக பேச்சாளர் | மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ஜி.சுமன் | கச்சூர் |
| ஊத்துக்கோட்டை பேரூர் | அபிராமி குமரவேல் | கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மாவட்ட துணை செயலாளர் காஞ்சி–பாஸ்கர் கழகப் பேச்சாளர் | ஊத்துக்கோட்டை பேரூராட்சி மன்ற தலைவர் அப்துல் ரஷீத் ஊத்துக்கோட்டை பேரூராட்சி மன்ற துணை தலைவர் குமரவேல் மாவட்ட விளையாட்டுமேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ராஜேஷ் | ஊத்துக் கோட்டை பஜார் |

இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் நிர்வாகங்களில் உள்ள மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கை அச்சிட்டு அவர்களுடன் இணைந்து நடத்திட வேண்டும் நமது கழக மாநில,மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ்**
பொறுப்பாளர் – திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

"என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" குழுவினர் (BLA2, BLC, BDA)

# தி.மு.க. சென்னை மற்றும் விழுப்புரம் மண்டல பயிற்சி மாநாடு! கடலூர் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட BLA2, BLC, BDAக்கள் பங்கேற்பு!

## மாவட்ட செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையிலும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னிலையிலும், நாளை (11.02.2026 - புதன்கிழமை), மாலை 03.00மணியளவில்,காஞ்சிபுரம்மாவட்டம்,மாமல்லபுரம்அருகேதிருவிடந்தையில், "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" குழுவினரின் தி.மு.க. சென்னை மற்றும் விழுப்புரம் மண்டல மாநாடு நடைபெற உள்ளது.

அது சமயம் இம்மாநாட்டில் கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார் கோயில், குறிஞ்சிப்பாடி, கடலூர், சிதம்பரம், புவனகிரி ஆகிய ஐந்து சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA2), பாக நிலைக்குழு உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள் (BDA), அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

மேலும் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்**
*செயலாளர்*
*கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.*

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம்!


# பிரதமர் மக்களவையில் பதிலுரைக்க மறுத்து விட்டதன் மூலம் தம் மீதான குற்றச்சாட்டுகள் உண்மை என நிரூபித்து விட்டார்!

## 'தி இந்து' ஆங்கில நாளேடு தலையங்கம்!

சென்னை, பிப். 10 -

குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு மக்களவையில் பதிலுரை அளிக்க மறுத்து விட்டதன் மூலம், தன் மீதான குற்றச்சாட் டுக்கள் உண்மை தான் என பிரதமர் மோடி நிருபித்து விட்டதாக தி இந்து நாளிதழ் விமர்சித்துள்ளது.

*Question and answer: on Parliament, parliamentary norms* எனும் தலைப்பில் தி இந்து நாளேடு தலையங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.



THE HINDU
Question and answer
Parliament must function as the forum to debate contentious issues
In an unusual departure from established parliamentary convention, the Lok Sabha adopted the motion of thanks to the President's address to Parliament without the Prime Minister's reply to the debate on February 5. The explanation by the Lok Sabha Speaker, Om Birla, for the PM not replying to the discussion on the motion raised more questions than it answered. Mr. Birla said that he had concrete information about Opposition Members of Parliament (MP) planning something "unexpected", obliquely

அதில், நாடாளுமன்ற மரபுகளுக்கு மாறாக பிப்ரவரி 5 அன்று மக்களவையில் குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்திற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பிரதமரின் பதிலுரை இல்லாமலேயே, நிறைவேற்றப்பட்டதையும், அத்தீர்மானம் குறித்த விவாதத்திற்கு பிரதமர் பதிலளிக்காதது குறித்து சபாநாயகர் ஓம் பிர்லா அளித்த விளக்கம், விடைகளை விட அதிக கேள்விகளையே எழுப்பியதாகவும் குறிப்பி டப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் எதிர்பாராத ஒன்றைச் செய்யத் திட்டமிடுவதாகத் தன்னிடம் உறுதியான தகவல் இருப்பதாக சபாநாயர் கூறியதை சுட்டிக் காட்டி உள்ள அத்தலையங்கம், எம்.பி.க்களால் தீங்கு ஏற்படும் என்ற அச்சத்தில் அவையில் பேசுவதை பிரதமர் தவிர்த்ததாக கூறுவது விசித்திர மானது என்றும் தெரிவித்துள்ளது.

மக்களவையில் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் எம்.எம். நரவனே எழுதிய புத்தகத்திலிருந்து சில பகுதிகளை மேற்கோள் காட்ட முயன்ற போது, அதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்தது, இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நடந்த நிகழ்வுகள், பிரதமர் மக்களவையில் பதிலுரை அளிக்காதற்கான முக்கிய காரணம் எனறும், சபாநாயர் மற்றும் பிரதமரின் இவ்விரண்டு செயல்களும்

நாடாளுமன்ற மரபுகளுக்கு எதிரானவை என்றும் ஜனநாயகப் பொறுப்புக்களில் இருந்து விலகும் கவலையளிக்கும் சரிவு என்றும் இத்தலையங்கம் சுட்டிக்காட்டி உள்ளது. விவாதமும், பிரதமரின் பதிலுரை யும், அரசு நிர்வாகம் நாடாளுமன்றத்திற்கு கட்டுப்பட்டது என்பதை உணர்த்தும் நடவடிக்கை என்றும், பிரதமரின் இருக்கைக்கு அருகில் எதிர்பாராத சூழ்நிலை ஏற்படக்கூடும் என்பதால் பிரதமர் அவைக்கு வர வேண்டாம் என்று தாம் கேட்டுக் கொண்டதாக சபாநாயகர் கூறியதை விமர்சித்துள்ள தி இந்து தலையங்கம், பிரதமரின் பதில் இல்லாமல் விவாதத்தை முடித்து க்கொள்ள அவை விரும்பி னால், அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

கேள்விக்குரிய புத்தகம் வெளியிடப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், அதன் உள்ளடக்கங்களை உறுதிப்படுத்தி, அதை சபாநாயகரிடம் அளிக்க தயாராக இருந்த ராகுல் காந்தியை அவையில் பேச அனுமதித்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள தி இந்து தலையங்கம், அந்தப் புத்தகம் தேசிய பாதுகாப்பு தொடர்பான முக்கிய பிரச்சினைகளை எழு ப்புவதாகவும், இவற்றை விவாதிப்பதற்கான வாய்ப்பை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு மறுப்பது நியாயப்படுத்த முடியாத செயலாகும் என்றும் விமர்சித்துள்ளது. நாடாளுமன்றத்திற்கு வெளியே ஜெனரல் நரவனேவின் புத்தகத்தில் இருந்து ராகுல் காந்தி சுட்டிக்காட்டிய பகுதிகள், உண்மையாக இருந்தால், தேசப் பாதுகாப்பு தொடர்பான விவகாரத்தில் ஒன்றிய அரசுதனது பொறுப்பை தட்டிக்கழித்துள்ளது எனத் தெரிவித்துள்ள தி இந்து தலையங்கம்,மக்களவையில் பதிலுரை அளிக்க மறுத்துவிட்டதன் மூலம் தன் மீதான குற்றச்சாட்டுக்கள் உண்மை தான் என்பதை பிரதமர் மோடி நிரூபித்து விட்டார் என்றும் விமர்சித்துள்ளது.

# முன்னாள் ஏ.டி.ஜி.பி., இராதாகிருஷ்ணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, பிப். 10 –

முன்னாள் ஏ.டி.ஜி.பி. டி இராதாகிருஷ்ணன் அவர்கள் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலை மறைந்த டி.இராதாகிருஷ்ணன் குடும்ப த்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஏ.டி.ஜி.பி. டி. ராதாகிருஷ்ணன் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

முன்னாள் ஏ.டி.ஜி.பி. T. ராதாகிருஷ்ணன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

நான் சென்னை மாநகர மேயராக இருந்த காலத்தில் சென்னை மாநகர இணை ஆணையராக ராதாகிருஷ்ணன் அவர்கள் பணியாற்றினார். 1981 பேட்ச் ஐ.பி.எஸ். அதிகாரியான அவர், ஏ.எஸ்.பி. முதல் ஏ.டி.ஜி.பி. வரை காவல்துறையின் பல்வேறு பொறுப்புகளில் சட்டம் ஒழுங்கைத் திறம்படக் கையாண்டிருக்கிறார்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர் மற்றும் காவல்துறை நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

தருமபுரி போன்ற பின் தங்கிய மாவட்டங்களில் உள்ளூர் வேலைவாய்ப்பினைப் பெருக்கிடும் வகையில்

# எஃகு அமைச்சகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, பிப்.10-

தமிழ்நாட்டில் தருமபுரி போன்ற மாவட்டங்களில் உள்ளூர் வேலைவாய்ப்பினை பெருக்கிடும் வகையில் கீழ்நிலை எஃகு அடிப்படையிலான சிறு,குறு மற்றும் நடுத்தரத் தொழில் குழும நிறுவனங்களை (MSME Clusters) ஊக்குவிக்க ஒன்றிய அரசு பரிசீலனை செய்துள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் ஆட்டோ கூறுகள், உற்பத்தி, கட்டுமான பொருள் அலகுகளுக்கென ஒன்றிய அரசின் திட்ட ஆதரவு ஏதேனும் நீட்டிக்கப்பட்டுள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

மலிவு விலையில் எஃகு விநியோகம் இல்லாதது சிறு உற்பத்தி அலகுகளை பாதிக்கின்றதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

ஒன்றிய அரசால் முன்மொழியப்பட்ட எஃகு சிறு,குறு மற்றும் நடுத்தரத் தொழில் குழும நிறுவனங்களுக்கான (MSME) உள்கட்டமைப்பு வசதிகள் சரிவர செய்யப்பட்டுள்ளதா?

தருமபுரி போன்ற பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி கொள்கை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் இரண்டையும் இணைத்து செயல்படுத்த ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என்று மக்களவையில் மாநில எஃகு அமைச்சகத்தின் மாநில அமைச்சர் பூபதிராஜு சீனிவாச வர்மாவிடம் தருமபுரி எம்.பி. வழக்கறிஞர் ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

### தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்

## தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட பா. மணிகண்டன் அவருக்கு பதிலாக **கே. ராஜேஷ்** (291, பெருமாள் கோயில் தெரு, 43. பனப்பாக்கம் கிராமம், பாலவாக்கம் அஞ்சல், ஊத்துக்கோட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.) அவர்கள் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18.
நாள் : 09-02-2026.

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்,
தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி